# தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்

**மனன வசனம்**

**இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ, என்று கேட்கிறேன், தள்ளிவிடவில்லையே; நானும் ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீன் கோத்திரத்திலும் பிறந்த இஸ்ரவேலன். ரோமர் 11:1.**

**ஆராய்ச்சிக்கு**

**ரோமர் 10; ரோமர் 11.**

டிசம்பர் 9 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.



ரோமர் 10,11ஆம் அதிகாரங்களை இந்த வாரம் ஆராயப்போகிறோம்; குறிப்பாக 11ஆம் அதிகாரத்தைப் பார்ப்போம். இரண்டு அதிகாரங்களையும் முழுவதும் வாசித்தால்தான் பவுல் சொல்லவருவதைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்த இரு அதிகாரங்களும் அதிகமாக விவாதிக்கப் பட்டுள்ளன; இன்னும் விவாதிக்கப்பட்டு வருகின்றன. மனிதர் அனைவரையும் தேவன் நேசிக்கிறார்; எல்லா ரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று அவர் விரும்பு கிறார் என்பதுதான் முக்கியமான கருத்து. எந்தப் பிரி வினருக்கும் இரட்சிப்பு மறுக்கப்படவில்லை. இதை சந்தேகத்திற்கு இடமின்றி ரோமர் 10 கூறுகிறது; 'யூத னென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை;' எல்லாருமே பாவிகள், இயேசு கிறிஸ்துமூலம் உலகத்தா ருக்கு அருளப்பட்ட தேவகிருபை எல்லாருக்கும் தேவை. ரோமர் 10:12. தேசத்தின் பெயராலோ, பிறப்பாலோ, நியாயப்பிரமாண கிரியைகளாலோ அல்ல, எங்குமுள்ள பாவிகளுக்காக இயேசு பதிலீடாக மரித்தாரென்பதை விசுவாசிப்பதால் இந்தக் கிருபையைப் பெறலாம். கொடுக்கப்படும் பொறுப்புகள் மாறலாம்; ஆனால் இரட் சிப்பின் அடிப்படைத் திட்டம் மாறுவதில்லை.

இந்தக் கருத்தை ரோமர் 11இல் பவுல் தொடர்கிறார். அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும்பற்றி பவுல் பேசும்போது, இரட்சிப்பைப்பற்றி அவர் பேசவில்லை என்பதையும், உலகத்திற்குச் சுவிசேஷம் அறிவிக்கும் தேவதிட்டத்தில் பங்காற்றுவதுபற்றிப் பேசுகிறாரென் றும் அறிந்திருக்கவேண்டும். எந்தப் பிரிவினருக்கும் இரட்சிப்பு மறுக்கப்படவில்லை. இயேசு சிலுவையில் மரித்து, புறஜாதியாருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட பிறகு, குறிப்பாக பவுல்மூலம் அறிவிக்கப்பட்டபிறகு, யூதர்களிலும் புறஜாதியாரிலும் இருந்து வந்த ஆரம்பக் கால விசுவாசிகள்தாம் உலகத்திற்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதில் முன்னோடிகளாக இருந்தார்கள்.

2017, டிசம்பர் 16 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## கிறிஸ்துவும் பிரமாணமும்

***இதுவரையிலும் நாம் படித்ததை மனதில்வைத்து ரோமர் 10:1-4ஐ வாசியுங்கள். பவுல் சொல்லும் செய்தி என்ன? இன்றும்கூட நாம் எவ்வாறு நம் 'சுயநீதியை' நிலைநிறுத்தும் ஆபத்தில் இருக்கிறோம்?***

கிரியைத்துவம் பலவிதங்களில் தலைதூக்கலாம்; சில மற்றவைகளைவிட அதிக நயவஞ்சகமாக முகங்காட்டும். தங்களையும், தங்கள் நற்செயல்களையும், தங்கள் உணவுக்கட்டுப்பாட்டையும், தங்கள் ஓய்வுநாள் ஆசரிப்பையும், தங்களிடம் சில கெட்டப்பழக்கங்கள் இல்லை என்பதையும், தாங்கள் செய்கிற நல்ல விஷயங்களையும் பெரிதுப்படுத்துகிறவர்கள், நல்ல நோக்கங்களுக்காக அப்படிச் செய்தாலும்கூட கிரியைத்துவம் என்கிற கண்ணியில் விழுகிறார்கள். நாம் பாவ நிலையில் இருந்தாலும், வாழ்வின் ஒவ்வொரு கணமும் தேவனுடைய பரிசுத்தத்தைக் காக்கவேண்டும்; கிறிஸ்துவின் நீதியைச் சிந்திக்காமல் 'சுயநீதியைச்' சிந்திக்கத் தூண்டடப்படுவதிலிருந்து அதுமட்டுமே பாதுகாக்கமுடியும்.

ரோமருக்கு பவுல் சொல்லவிரும்பிய செய்தியானது இரத்தின சுருக்கமாக ரோமர் 10:4இல் சொல்லப்பட்டுள்ளது. எந்தச் சூழ்நிலையில் இவ்வாறு சொல்கிறாரென முதலில் கவனிக்கவேண்டும். யூதர்கள் பலர் 'தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடி' (ரோமர் 10:3) 'நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியை' விரும்பினார்கள். ரோமர் 10:5. மெய்யான நீதியைப் பெற்றுக்கொள்ளும் வழியானது மேசியாவின் வருகையின் மூலம் அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. கிறிஸ்துவில் விசுவாசம்வைக்கும் யாவருக்கும் நீதி அருளப்பட்டது. முற்காலச் சடங்காச்சார முறைமைகள் அவரையே சுட்டிக்காட்டின.

நியாயப்பிரமாணத்தில் பத்துக்கற்பனைகள் அடங்கியிருப்பதும் உண்மைதான்; ஆனாலும், பத்துக்கற்பனைகள் ஒழியவில்லை. ஒழுக்கப்பிரமாணம் நம் பாவங்களையும் தவறுகளையும் குறைகளையும் சுட்டிக்காட்டி, நமக்கு ஓர் இரட்சகர் தேவை என்பதையும், நீதி தேவை என்பதையும் வலியுறுத்துகிறது; இயேசுவில் மட்டுமே இவற்றை நாம் பெறமுடியும். நியாயப்பிரமாணது கிறிஸ்துவிடமும் அவரது நீதியிடமும் நம்மை வழிநடத்துவதாலேயே அவர் நியாயப்பிரமாணத்தின் 'முடிவாக' இருக்கிறார். 'முடிவு' என்பதற்கான கிரேக்க வார்த்தை **டெலோஸ்**; 'நோக்கம்' 'இலக்கு' என்றும் அதை மொழிபெயர்க்கலாம். நியாயப்பிரமாணம் நம்மை இயேசுவிடம் வழிநடத்துவதால் அவரே நியாயப்பிரமாணத்தின் இறுதி நோக்கமாக இருக்கிறார்.

நான்காம் கற்பனை ஒழிந்ததாகச் சொல்வதற்காகவே இந்த வசனத்தைக் குறிப்பிட்டு, பத்துக்கற்பனை ஒழிந்ததாகக் கூறுகிறார்கள். பவுலும் புதிய ஏற்பாடும் சொல்லுபவற்றிற்கு முற்றிலும் நேர்மாறானதைக் கூறுகிறார்கள்.

மற்றவர்களோடு ஒப்பிட்டு, உங்களை மிகவும் நல்லவரென்று எப்போதாவது பெருமை கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் 'நல்லவராகவே' இருக்கலாம்; அதனால் என்ன? கிறிஸ்துவோடு உங்களை ஒப்பிடுங்கள்; பிறகு, நீங்கள் உண்மையிலேயே எவ்வளவு 'நல்லவரென' யோசியுங்கள்.

# கிருபையால் தெரிந்துகொள்ளப்படல்



***பொதுவாகக் காணப்படும் என்ன தவறான போதனையை ரோமர் 11:1-7 வசனங்கள் தெளிவாக, கேள்விக்கிடமின்றி மறுக்கின்றன?***

---

---

'தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ?' என்கிற கேள்விக்கு பதில் சொல்லும்போது, "கிருபையால் தெரிந்துகொள்ளப்பட்ட மீதமான ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள்; தம் மக்களாகிய அவர்களை தேவன் தள்ளவில்லை" என்று முதலாவது பவுல் சொல்கிறார். யூதர், புறஜாதியார் என இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளும் அனைவரும் இரட்சிப்பைப் பெறமுடியும்.

முதன்முதலாக மனம்மாறி கிறிஸ்தவமார்க்கத்தைத் தழுவியவர்கள் யூதர்கள் தாம்; பெந்தேகொஸ்தே நாளில் மனந்திரும்பியவர்களை அதற்கு உதாரணமாகக் கூறலாம். கிறிஸ்துவின் கிருபையைப் பெற்றுக்கொள்ள யூதர்களுக்கும் சரிசம வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதென்றும், அவர்களுக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டுமென்றும் பேதுரு நம்புவதற்கு ஒரு விசேஷித்த தரிசனமும் அற்புதமும் அவசியமாக இருந்தது. (அப் 10; ஒப்பிடவும் அப் 15:7-9.)

***ரோமர் 11:7-10 வசனங்களை வாசியுங்கள். இஸ்ரவேல் மக்களில் இயேசுவை மறுதலித்தவர்களை தேவன் வேண்டுமென்றே இரட்சிப்பைக் காணக்கூடாமல் செய்தாரா? இந்தக் கருத்து ஏன் தவறானது?***

---

பழைய ஏற்பாட்டை அதிகாரமிக்கதாக யூதர்கள் ஏற்றுக்கொண்டிருந்தார்கள்; அதிலுள்ள வாக்கியங்களைச் சுட்டிக்காட்டி ரோமர் 11:8-10 வசனங்களில் பவுல் பேசுகிறார். இஸ்ரவேலர் காணவும் கேட்கவும் கூடாதபடிக்கு, கனநித்திரையின் ஆவியை தேவன் அவர்களுக்குக் கொடுத்ததுபோல அவ்வசனங்கள் கூறுகின்றன. இரட்சிப்புக்கு வழிநடத்துகிற வெளிச்சத்தைக் காணாதபடிக்கு மனிதர்களுடைய கண்களை தேவன் குருடாக்குகிறாரா? இல்லவே இல்லை! ரோமர் 9 பற்றி நாம் படித்த விளக்கத்தின் வெளிச்சத்தில் இந்த வசனங்களுக்கு அர்த்தம் காணவேண்டும். எந்தப் பிரிவினருக்கும் இரட்சிப்பு தடைசெய்யப்படவில்லை; எனவே தனிப்பட்ட நபர்களின் இரட்சிப்பு குறித்து பவுல் இங்கு பேசவில்லை. தேவனுடைய பணியில் அவர்களுடைய பங்கு என்னவாக இருந்தது என்பதுபற்றியே பவுல் பேசிவருகிறார்.

ஒரு குறிப்பிட்ட பிரிவினரைச் சுட்டிக்காட்டி, தேவன் அவர்களுக்கு இரட்சிப்பைத் தடை செய்திருக்கிறார் என்று கூறுவது ஏன் தவறானது? எல்லா மனிதரும் இரட்சிக்கப்படும்படியே கிறிஸ்து மரித்தார் என்று நற்செய்தி சொல்வதால், இந்தக் கருத்து ஏன் நற்செய்திக்கு எதிரானதாக இருக்கிறது? யூதர்கள் இப்படிப்பட்ட தவறான கருத்துகளைக் கொண்டிருந்தது எவ்வாறு வருத்தகரமான விளைவுகளுக்கு வழிநடத்தியது?

***எவ்வளவு பெரிய நம்பிக்கை குறித்து ரோமர் 11:11-15இல் பவுல் பேசுகிறார்?***

இந்த வசனங்களில், இரண்டு இணையான சொற்றொடர்கள் உள்ளன:

**1) அவர்களுடைய [இஸ்ரவேலரின்] நிறைவு (ரோமர் 11:12)**

**2) 'அவர்களை [இஸ்ரவேலரை] அங்கீகரித்தல் (ரோமர் 11:15).**

இஸ்ரவேலர் தள்ளப்படுவதும், அவர்கள் குறைவுபடுவதும் தற்காலிகமானதே. அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைவார்கள். இவ்வாறு பவுல் முன்னுரைக்கிறார். 'தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ?' என்று இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் அவர் கேட்ட கேள்விக்கான இரண்டாவது பதில் இது. அவர்கள் தள்ளிவிடப்படுவதுபோலத் தோன்றுவது தற்காலிகமானதே.

***ரோமர் 11:16-24இல் பவுல் நமக்குச் சொல்லும் செய்தி என்ன?***

இஸ்ரவேலில் உண்மையாய் இருந்த மீதமானவர்களை நல்ல ஒலிவ மரத்திற்கு பவுல் ஒப்பிடுகிறார்; அவர்களுடைய கிளைகளில் சிலதாம் (அவிசுவாசிகள்) முறித்துப்போடப்பட்டன; தேவன் 'தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை' என்று உறுதிப்படுத்துவதற்கு பவுல் இந்த எடுத்துக்காட்டைக் கூறுகிறார். ரோமர் 11:2. வேரும் மரத்தண்டும் விட்டுவைக்கப்பட்டிருந்தன.

இந்த மரத்தில்தான் விசுவாசிகளான புறஜாதியார் ஒட்டவைக்கப்பட்டார்கள். விசுவாசமுள்ள இஸ்ரவேலரைச் சுட்டிக்காட்டின வேர் மற்றும் தண்டிலிருந்து சாற்றையும் சத்துக்களையும் அவர்கள் பெறுகிறார்கள்.

இயேசுவைப் புறக்கணித்தவர்களுக்கு நேர்ந்த அதே கதி, விசுவாசிகளான புறஜாதியாருக்கும் நிகழ்வதற்கு வாய்ப்பிருக்கிறது. 'ஒருமுறை இரட்சிப்பு, எப்போதுமே இரட்சிப்பு' என்று வேதாகமம் எங்குமே போதிக்கவில்லை. இரட்சிப்பு எவ்வாறு இலவசமாக அருளப்படுகிறதோ, அதுபோலவே அதை தாராளமாகப் புறக்கணிக்கவும் செய்யலாம். நாம் பாவத்தில் விழுகிற சமயங்களிளெல்லாம் இரட்சிப்பை இழந்துவிட்டதாகவோ, நாம் பூரணநிலையை அடையாவிட்டால் இரட்சிக்கப்பட முடியாதென்றோ நினைப்பது தவறு; அதுபோல இதற்கு நேர் எதிரான ஒரு குழியிலும் விழுந்துவிடக்கூடாது. அதாவது, தேவ கிருபை ஒருமுறை நம்மை மூடிவிட்டால், நாம் செய்கிற, நாம் தீர்மானிக்கிற எதுவும் இரட்சிப்பை நம்மிடமிருந்து எடுக்கமுடியாது என்று நினைப்பதாகும். தேவனுடைய 'தயவிலே நிலைத்திருப்பவர்கள்' மட்டுமே இறுதியில் இரட்சிக்கப்படுவார்கள். ரோமர் 11:22.

இரட்சிப்பு ஓர் இலவச ஈவு. சிலுவைக்கும், தேவனுடைய பரிசுத்தத்தின் அளவுக்கும் முன்பாக நாம் அனைவருமே சமம்; நாம் தேவகிருபை தேவைப்படும் பாவிகள், பரிசுத்தமாக்கப்படவேண்டியவர்கள்; கிருபையால் இது கிடைக்கிறது. நாம் பெருமைபாராட்ட எதுவுமே இல்லை; இயேசுவைக்குறித்தும், அவர் இவ்வுலகத்திற்கு மனிதனாக வந்து, நம் சாபங்களை அனுபவித்து, நம் பாவங்களுக்காக மரித்து, நமக்கு முன்மாதிரியாக வாழ்ந்து, அந்த வாழ்க்கையை வாழ்வதற்கான வல்லமையைத் தருவதாக வாக்களித்ததுகுறித்தே நாம் பெருமைபாராட்ட வேண்டும். இவை அனைத்திற்கும் நாம் முற்றிலும் அவரையே சார்ந்திருக்க வேண்டும்; இந்த உலகத்தால் தரக்கூடியதே தவிர வேறு எதையும் அவரில்லாமல் பெறமுடியாது.

***ரோமர் 11:25-27இல் பவுல் முன்னுரைக்கும் முக்கிய நிகழ்வுகள் என்ன?***

ரோமர் 11:25–27 வசனங்கள்பற்றி பல நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்கள் விவாதித்து வந்திருக்கிறார்கள். ஒரு சில கருத்துகள் தெளிவாக விளங்குகின்றன. யூதர்களை தேவன் அணுகினவிதம்பற்றியே அந்த வசனங்கள் முழுவதும் பேசுகின்றன. இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில், 'தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ?' என்று தான் எழுப்பிய கேள்விக்கு பவுல் இதைப் பதிலாகச் சொல்கிறார். அதாவது, தேவன் தள்ளிவிடவில்லை. அதற்கு அவர் சொல்லும் காரணம்:

1) **'ஒரு பங்குக்கு' மட்டுமே கடின மனது உண்டாயிருக்கும். கடினம் என்பதற்கான கிரேக்க வார்த்தை - பேரோஸிஸ்.**

2) **இது ஒரு தற்காலிக நிலை; புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரையிலும் இது காணப்படும்.**

'புறஜாதியாருடைய நிறைவு' என்றால் என்ன? நற்செய்தி ஊழியக்கட்டளையின் நிறைவேறுதலாக உலகம் முழுவதிற்கும் நற்செய்தி அறிவிக்கப்படும் நிலையை இது சுட்டிக்காட்டுவதாக பலர் கருதுகிறார்கள். நற்செய்தி எங்கும் அறிவிக்கப்பட்டதும் 'புறஜாதியாரின் நிறைவு' உண்டாகிறது. கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட இஸ்ரவேலரின் விசுவாசமானது உலகமெங்கிலும் காணப்படுகிறது. நற்செய்தி உலகம் முழுவதிலும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. இயேசுவின் வருகை சமீபமாகிறது. அப்போது யூதர்கள் அநேகர் இயேசுவிடம் வர ஆரம்பிக்கிறார்கள்.

'இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்' என்று ரோமர் 11:26 சொல்கிறது; கடைசி நாளில் தேவனுடைய விசேஷித்த கட்டளையால் யூதர்கள் அனைவரும் இரட்சிப்புக்குள் தெரிந்துகொள்ளப்படுவதாக இந்த வசனம் சொல்கிறதென நினைக்கவேண்டாம். ஒரு குறிப்பிட்ட பிரிவினர் யாவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று வேதாகமத்தில் எங்குமே சொல்லப்படவில்லை. 'சிலரை இரட்சிக்கவே' பவுல் பிரயாசப்படுவதாகக் கூறுகிறார். ரோமர் 11:13. பிறமனிதர்களில் காணப்படுவதுபோல, மேசியாவை சிலர் ஏற்றுக்கொண்டார்கள்; சிலர் புறக்கணித்தார்கள்.

'சுவிசேஷம் இறுதியாக அறிவிக்கப்படும்போது' 'யூதர்கள் அநேகர் கிறிஸ்துவை விசுவாசித்து அவரை தங்கள் மீட்பராக ஏற்றுக்கொள்வார்கள்' என்று எலன் ஒய்ட், ரோமர் 11க்கு விளக்கம் கூறும்போது குறிப்பிடுகிறார். – *AA, p 381.*

'நம் உலகில் வல்லமையான ஒரு பணி செய்யப்படவேண்டியுள்ளது. புறஜாதியாரும், புறஜாதியார் மாத்திரமல்ல யூதர்களும் கூட்டிச்சேர்க்கப்படுவார்களென்று ஆண்டவர் அறிவித்திருக்கிறார். யூதர்களில் அநேகர் மனமாறுவார்கள்; பிரகாசிக்கிற விளக்கைப்போல அவர்கள்மூலமாக இரட்சிப்பு செல்லும். எல்லா இடங்களிலும் யூதர்கள் இருக்கிறார்கள்; தற்காலச் சத்தியத்தின் வெளிச்சத்தை அவர்களும் காணவேண்டும். அவர்களில் அநேகர் அந்த வெளிச்சத்திற்கு இணங்குவார்கள்; தேவனுடைய மாறாத கட்டளையை அற்புத வல்லமையோடே அறிவிப்பார்கள்.' *Ev, p 578.*

கிறிஸ்தவ விசுவாசத்தின் யூதவேர்கள்பற்றிச் சிந்தித்துப்பாருங்கள். யூதமார்க்கத்தின் சில பயன்மிக்க முறைகளை ஆராய்வது எவ்வாறு உங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தை மேலும் வளர்த்துக்கொள்ள உதவியாக இருக்கும்?

## பாவிகளின் இரட்சிப்பு

பவுல் தன்னுடைய இனத்தைச் சேர்ந்தவர்களை எவ்வளவாக நேசித்தார் என்பதை ரோமர் 11:25-27இல் காணலாம். அவர்களில் சிலர் அவருக்கு எதிராகவும், சுவிசேஷச் சத்தியத்திற்கு எதிராகவும் சண்டையிட்டபோது, அவருக்கு உண்மையிலேயே வருத்தமாக இருந்திருக்கும். ஆனாலும், அநேகர் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்வார்களென்று நம்பினார்.

***யூதர்களிடம் மாத்திரமல்ல, மனிதர்கள் அனைவர்மேலும் தேவன் அன்பாக இருக்கிறாரென ரோமர் 11:28-36இல் பவுல் எவ்வாறு காட்டுகிறார்? தேவ கிருபையின் ஆச்சரியமான, அற்புதமான வல்லமை குறித்து அவர் சொல்வது என்ன?***

---

---

ரோமர் 11:28-36இல் யூதர்களும் புறஜாதியாரும் வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கிறபோதிலும், ஒன்றுமட்டும் உறுதியாகத் தெரிகிறது; அதாவது, தேவன் தம் அன்பையும் கிருபையையும் இரக்கத்தையும் பாவிகள்மேல் ஊற்றியிருக்கிறார். மனிதர்களை இரட்சிப்பதும், பிற மனிதர்களையும் தேசங்களையும் தம் கரத்தின் கருவிகளாகப் பயன்படுத்தி, தம் சித்தத்தை நிறைவேற்றுவதும் உலகத்தோற்றம் முதலே தேவனுடைய சித்தமாக இருந்தது.

***ரோமர் 11:31ஐ ஜெபத்தோடும் கவனத்தோடும் வாசியுங்கள். யூதர்களிடம் மாத்திரமல்ல, நாம் தொடர்புகொள்ளும் ஒவ்வொருவரிடமும் நம் சாட்சியைப் பகிர்ந்துகொள்ளும்போது, இந்த வசனம் சொல்லும் என்ன முக்கியக் கருத்தை நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும்?***

---

சென்ற நூற்றாண்டுகளில் கிறிஸ்தவச் சபையானது யூதர்களை பண்பான விதத்தில் நடத்தியிருந்தால், அநேகர் மேசியாவண்டை வந்திருக்கக்கூடும். கிறிஸ்துவுக்குப் பிறகு ஆரம்ப நூற்றாண்டுகளில் உண்டான மிகப்பெரும் வீழ்ச்சியும், ஏழாம் நாள் ஓய்வுநாளுக்கு பதிலாக ஞாயிறு ஆசரிப்பு கொண்டுவரப்பட்டது உட்பட, கிறிஸ்தவ மார்க்கத்தில் அஞ்ஞான மார்க்கத்தின் கடுந்தலையீடும் கிறிஸ்துவிடம் யூதர்கள் வருவதற்கு தடையாக இருந்தன.

அப்படியானால், கிறிஸ்தவர்கள் அனைவரும் கிறிஸ்துவுக்குள் தங்களுக்கு அருளப்பட்டுள்ள இரக்கத்தை உணர்ந்து, எவ்வளவாக மற்றவர்கள்மேல் இரக்கம் காட்டவேண்டும். அவ்வாறு இரக்கம் காட்டாவிட்டால் நாம் கிறிஸ்தவர்களாகவே இருக்கமுடியாது. மத் 18:23-35.

---

யாராவது ஒருவருக்கு நீங்கள் இரக்கம் காட்டவேண்டியிருக்கிறதா? அவர் அதற்குத் தகுதி இல்லாதவராகக்கூட இருக்கலாம். எனவே, அது எவ்வளவுதான் உங்களுக்குக் கடினமாக ஒன்றாக இருந்தாலும், அவர்மேல் இரக்கம் காட்டலாம், அல்லவா? இயேசுவும் நம்மேல் அவ்வாறுதானே இரக்கம் காட்டினார்?

“ஒரு தேசமாக இஸ்ரவேலர் தோற்றிருந்தாலும், அவர்களில் இரட்சிக்கப்படத்தக்க மீதமானவர்கள் இருந்தார்கள். இரட்சகர் வந்திருந்தபோது, யோவான் ஸ்நானனின் செய்தியை சந்தோஷமாக ஏற்றுக்கொண்ட உண்மையுள்ள ஆண்களும் பெண்களும் அங்கிருந்தார்கள்; மேசியா குறித்த தீர்க்கதரிசனங்களை புதிதாக ஆராய வழிநடத்தப்பட்டார்கள். உண்மையுள்ள இந்த யூதர்களை வைத்துதான் ஆதிகாலக் கிறிஸ்தவ சபை ஸ்தாபிக்கப்பட்டது; தாங்கள் இதுவரையிலும் எதிர்பார்த்திருந்தவர் நாசரேத்தின் இயேசுதான் என்பதை இவர்கள் உணர்ந்திருந்தார்கள்.” – *EGW, AA, p 376,377.*

“யூதர்களில் சிலர், தர்சுவின் சவுலைப் போல வேதவாக்கியங்களை நன்கு கற்றறிந்தவர்களாக இருக்கிறார்கள்; தேவனுடைய மாறாப் பிரமாணத்தை ஆச்சரியமான வல்லமையோடு அவர்கள் பிரசங்கிப்பார்கள். வெகுகாலமாக ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அவருடைய தாசர்கள் உண்மையோடு ஊழியம்செய்யும்போது, அவருடைய இரட்சிப்பு வெளிப்படும்.” – *EGW, AA, p 381.*

“சுவிசேஷத்தை இறுதியாக அறிவிக்கும் வேளையில், இதுவரையிலும் புறக்கணிக்கப்பட்ட பிரிவினர்களுக்கு விசேஷமாக ஊழியம் செய்யும்போது, தம் தாசர்கள் உலகம் முழுவதிலுமுள்ள யூதர்கள்மேல் தனிக்கவனம் செலுத்தவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். யெகோவாவின் நித்திய நோக்கத்தை விளக்கும்விதத்தில் புதிய ஏற்பாட்டு வேதவாக்கியங்களோடு பழையஏற்பாட்டு வாக்கியங்கள் சேர்க்கப்பட்டிருப்பது போல, அநேக யூதர்களுக்கு இது ஒரு புது பிறப்பின் அனுபவமாகவும், ஆத்தும உயிர்த்தெழுதலாகவும் இருக்கும். பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்களின் நற்செய்தியில் கிறிஸ்து சொல்லப்பட்டிருப்பதைக் கண்டு, புதிய ஏற்பாட்டு வாக்கியங்கள் அவற்றை தெளிவாக விளக்கியிருப்பதை உணரும்போது, தூங்கிக்கொண்டிருக்கும் அவர்கள் மனத்திறன்கள் விழித்துக் கொள்ளும்; கிறிஸ்துவே உலகத்தின் இரட்சகரென உணர்வார்கள். பலர் விசுவாசத்தோடு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள்.” – *EGW, AA, p 381.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *அட்வென்ட்டிஸ்டுகளைப் போல யூதர்களும் பத்துக்கற்பனையைக் கைக்கொள்பவர்கள்தாம்; ஓய்வுநாளானது உலகத்தாரின் தனிக் கவனத்திற்கு வரும் வேளையில், ஓய்வுநாள்குறித்து உலகத்தாருக்கு விளக்கமளிப்பதில் யூதர்களுக்கும் ஒரு பங்கு இருக்கும். ஓய்வுநாளைக் கைக்கொள்ளும் விஷயத்தில் யூதர்களோடு ஒப்பிடும்போது நாம் ‘புதியவர்கள் தாம்’.*
2. *மற்ற சபைகளைவிட அட்வென்ட்டிஸ்ட் சபைதான் யூதர்களை வெற்றிகரமாக அணுகமுடியும்; காரணம் என்ன? உங்கள் சமுதாயத்தில் உள்ள யூதர்களை அணுக, ஒரு சபையாக நீங்கள் என்ன செய்கிறீர்கள்?*
3. *முற்கால இஸ்ரவேலர் பலர் தவறினார்கள்; அதிலிருந்து என்ன பாடம் கற்கலாம்? அதே தவற்றைச் செய்யாமலிருக்க நாம் என்ன செய்யவேண்டும்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Hope TV India

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*